Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி






## டெங்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனைகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்: கலெக்டர்களுக்கு முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை, 24 செப்டம்பர் 2026: முதல்வர் விஜய் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு தெற்கு உள்மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களான கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், மதுரை, நீலகிரி, சிவகங்கை, தென்காசி, தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்தும், டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சி தலைவர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அமைச்சர் நிர்மல் குமார், தலைமைச் செயலாளர் சாய்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை செயலாளர் சித்திக், வருவாய் நிர்வாக ஆணையர் சந்தர மோகன், எரிசக்தி துறை செயலாளர் அனில் மேஷ்ராம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை செயலாளர் தாரேஸ் அகமது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் பழனிசாமி, நீர்வளத்துறை செயலாளர் பிரசாந்த் வடநெரே, பேரிடர் மேலாண்மை ஆணையர் சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்



கள் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், மதுரை, நீலகிரி, சிவகங்கை, தென்காசி, தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முதல்வர் விஜய் பேசியதாவது: தென் மாவட்டங்களில் கால்வாய்கள், நீர்வழிகள், கண்மாய்கள், உபரி நீர்வழிகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்புகள் தடையின்றி செயல்படுவதை உறுதிசெய்து, அடையாளம் காணப்பட்ட வெள்ள அபாய பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்டவாரியாக டெங்கு மற்றும் காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் நோய் அதிகரித்துவரும் பகுதிகளைக் கண்டறிய வேண்டும். தீவிர டெங்கு நோயாளிகளுக்கான சிகிச்சை, தொடர் மருத்துவ கண்காணிப்பு உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் 8 ஆண்டுகள் நிறைவையொட்டி, அதன் சாதனைகள் குறித்து பிரதமர் குறிப்பிட்டுள்ளார்

சென்னை 24, செப்டம்பர் 2026: ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டு எட்டு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அதன் சாதனைகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று எடுத்துரைத்துள்ளார்.

ஒவ்வொரு இந்தியரும் தரமான, குறைந்த கட்டணத்துடன் கூடிய மருத்துவ வசதியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 8 ஆண்டுகளுக்கு முன்பு இத்திட்டம் தொடங்கப்பட்டதாகப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். தற்போது, 60 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் ரூ.5 லட்சம் வரையிலான மருத்துவக் காப்பீட்டு வசதியைப் பெற்று வருவதாகவும், இது உலகில் மிகப் பெரிய சுகாதாரத் திட்டம் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மருத்துவச் செலவுகளில் சாதனை அளவிற்கு சேமிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஏழை, நடுத்தர வகுப்பினர் பயனடைந்துள்ளதாகவும் திரு மோடி தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் ஒவ்வொருவரின் இருப்பிடங்களுக்கு அருகே கொண்டு செல்லப்படுவது குறித்து குறிப்பிட்ட பிரதமர், ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களில் 500 கோடிக்கும் அதிகமான வருகைகள் இதுவரை பதிவாகியுள்ளதாகவும், இது அடிப்படை அளவில் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துவதாகவும் கூறியுள்ளார். ஆயுஷ்மான் பாரத் பயனாளிகள் அனைவருக்கும் அவர் தமது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பகிர்ந்திருப்ப




தாவது:

"ஒவ்வொரு இந்தியரும் தரமான, குறைந்த கட்டணத்துடன் கூடிய மருத்துவ வசதியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டது.

தற்போது, 60 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் ரூ.5 லட்சம் வரையிலான மருத்துவ காப்பீட்டு வசதியைப் பெற்று வருகின்றனர். இது உலகில் மிகப்பெரிய சுகாதாரத் திட்டமாகும்.

இதன் மூலம் மருத்துவச் செலவுகளில் சேமிப்பு ஏற்பட்டு, ஏழை, நடுத்தர வகுப்பினர் பயனடைந்துள்ளனர்.

சுகாதாரச் சேவைகள் ஒவ்வொருவரின் இருப்பிடங்களையும் சென்றடைகிறது.

ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களில் 500 கோடிக்கும் அதிகமான வருகைகள் இதுவரை பதிவாகியுள்ளது. இது அடிப்படை அளவில் ஆரம்ப சுகாதாரச் சேவையை வலுப்படுத்துகிறது.

ஆயுஷ்மான் பாரத் பயனாளிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

ஆயுஷ்மான் பாரத்தின் 8 ஆண்டுகள்"

## தொடர் மின்வெட்டால் தொழில்கள், தொழிலாளர்களுக்கு பாதிப்பு எதிரொலி : உள்ளே விஜய் ஆய்வு வெளியே ஊழியர்கள் போராட்டம்; தமிழக அரசுக்கு எதிராக மின்வாரிய ஊழியர்கள் உண்ணாவிரதத்தால் பரபரப்பு

சென்னை, 24 செப்டம்பர் 2026: மின்வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் விஜய் ஆய்வு நடத்திய நேரத்தில் பின்வாசலில் ஊழியர்கள் போராட்டம் நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழகத்தில் தொடர் மின்வெட்டால், தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ள. தொழில்கள் முடங்கியுள்ளன. தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். விவசாயிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களும் மின்வெட்டில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக டெங்கு பரவும் நேரத்தில் மின்சாரம் இல்லாததால் மக்கள் வெளியில் தூங்கும் நிலை உருவாகியுள்ளது. இந்தநிலையில், கொசுக்கடிக்கு உள்ளாகின்றனர். தொடர்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், முதல்வர் விஜய், முதல்முறையாக சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்துக்கு வந்தார். அங்கு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மின்வெட்டு பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார். ஊழியர்களிடமும் பேசினார். அதே நேரத்தில், தமிழ்நாடு மின்வாரியத்தில் கள உதவியாளர் பணிக்கு ஐடிஐ படித்தவர்களை 5 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் தமிழக அரசின் அறிவிப்பை கண்டித்து, தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் சார்பில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இன்று சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தின் பின்புற வாயிலில் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். போராட்டத்தில் சங்கத் தலைவர் சுப்பிரமணியன் பேசியதாவது: தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 40 ஆயிரம் கள உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்த பணியிடங்களை நிரப்பாமல், கள உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க அரசு முடிவு செய்திருப்பது கண்டனத்திற்குரியது.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மின்சார பிரச்னைகள் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிலையில், களத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்களின் பற்றாக்குறையும் இதற்கு ஒரு காரணமாக உள்ளது. காலியாக உள்ள பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு பதிலாக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமிப்பது மின்வாரியத்தின் செயல்பாட்டையும், ஊழியர்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும். மின்சாரத் துறையில் உயர்பதவிகளை டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்புவோம் என கூறும் அரசு, பொதுமக்களை நேரடியாக சந்தித்து களத்தில் பணியாற்றக்கூடியவர்களை மட்டும் 5 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது நியாயமா? 5 ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு அந்த ஊழியர்கள் தங்களது குடும்பத்தை எப்படி காப்பாற்றுவார்கள்? கண்ணுக்குத் தெரியாத மின்சாரத்தை கையாளும் பணியில் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றும் களப்பணியாளர்களை 5 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் எடுப்பது நியாயமா? அல்லது மின்விசிறியின் கீழ் பணியாற்றும் உயர் அதிகாரிகளை நிரந்தர பணிக்கு டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வு செய்வது சரியா?

மேலும், தமிழக அரசு வெளியிட்டுள்ள இந்த கொள்கை முடிவு ஆபத்தானது. ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து பணியாளர்களை நியமிக்கும் நடைமுறை சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும். ஒன்றிய அரசு கொண்டு வரும் கொள்கைகளை தமிழக வெற்றி கழக அரசு பின்பற்றி நடைமுறைப் படுத்துகிறது.

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கைது செய்ய வேண்டும் - மம்தா பானர்ஜி ஆவேசம்

சென்னை 24, செப்டம்பர் 2026: எஸ்ஐஆர் செயல்முறையில் உள்ள முரண்பாடுகளை இரண்டு தேர்தல் ஆணையர்கள் எதிர்த்ததாக வெளியாகி இருக்கும் தகவல் அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் மேற்கு வங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி, "இது மிகவும் அதிர்ச்சியளிக்கும் மற்றும் அவமானகரமான ஒரு விவகாரம். வாழ்நாளில் இதுபோன்ற ஒன்றை பார்த்ததே இல்லை. சம்பந்தப்பட்ட தேர்தல் ஆணையர் கைது செய்யப்பட வேண்டும். பதவியில் தொடர அவருக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை; நமது அரசியலமைப்பைத் தகர்க்க முடியாது என்பதை பாஜக உணர வேண்டும் என பொரிந்து தள்ளி உள்ளார்.

தொடர்ந்து பேசி உள்ள மம்தா, பாஜக-வால் ஜனநாயகத்தை



அழிக்க முடியாது. நான் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சியினர் முன்பே கூறியது இப்போது அம்பலமாகியுள்ளது. தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் காவல் துறையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்; பாஜகவுடன் இணைந்து, பாஜக ஆதரவு மனப்பான்மை கொண்ட தங்கள் ஆட்களையே அவர்கள் நியமித்துள்ளனர்.

இத்தகைய மோசமான செயல் இதற்கு முன் நடந்ததே இல்லை. உங்களுக்குச் சிறிதளவேனும் கண்ணியம் இருந்தால், உங்களைக் கைது செய்யுமாறு நீங்களே கோரியிருப்பீர்கள். நீங்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று ஞானேஷ் குமாருக்கு கண்டனம் தெரிவித்து உள்ளார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
செப்டம்பர் 24, 2026

# ஸ்வஸ்திகா இன்ஃப்ரா லிமிடெட் நிறுவனத்தின் பொதுப் பங்கு வெளியீடு (ஐபிஓ) 2026 செப்டம்பர் 25 அன்று நிறைவடைகிறது

சென்னை 24, செப்டம்பர் 2026: மின்சாரம் கடத்துதல் மற்றும் விநியோகம் (பவர் டி&டி) சார்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இபிசி) நிறுவனமான ஸ்வஸ்திகா இன்ஃப்ரா லிமிடெட், தனது பொதுப் பங்கு வெளியீட்டை (ஐபிஓ) அறிவித்துள்ளது. இந்தப் பொது வெளியீட்டில், ரூ.12,850.00 லட்சம் வரையிலான புதிய பங்கு வெளியீடு மற்றும் 17,50,000 பங்குகள் வரையிலான 'விற்பனைக்கான பங்கு வெளியீடு' (ஆஃபர் ஃபார் சேல்) ஆகியவை அடங்கும். ஒரு லாட் அளவு 81 பங்குகள் அல்லது அதன் மடங்குகளாகவும், ஒரு பங்கின் விலை வரம்பு ரூ.175 முதல் ரூ. 185 வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஸ்வஸ்திகா இன்ஃப்ரா லிமிடெட், 2026 செப்டம்பர் 23 அன்று தொடங்கும் பொதுப் பங்கு வெளியீட்டின் மூலம் பொது நிறுவனமாக மாறத் திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றில் பட்டியலிடப்பட உள்ளன.




ராஜஸ்தானின் ஜெய்ப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஸ்வஸ்திகா இன்ஃப்ரா, மின்சாரம் கடத்துதல் மற்றும் விநியோக உள்கட்டமைப்புத் துறையில் முழுமையான தீர்வுகளை (டர்ன்கீ சொல்யூஷன்ஸ்) வழங்குகிறது. இதில் நிலத்தடி கேபிள் அமைத்தல், துணை மின்நிலையங்கள் (சப்ஸ்டேஷன்ஸ்) அமைத்தல், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மின்மயமாக்கல் திட்டங்கள், தெரு விளக்கு அமைப்புகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பணிகள் ஆகியவை அடங்கும். கொள்முதல் மற்றும் கட்டுமானம் முதல் நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல் (கமிஷனிங்) வரை இந்நிறுவனத்தின் சேவைகள் விரிந்துள்ளன; இதனால் திட்டங்களை அவற்றின் முழுச் செயல்பாட்டுக் காலத்திலும் (லைஃப் சைக்கிள்) மேற்கொள்ள முடிகிறது.

"எங்கள் ஐபிஓ வெளியீடு ஸ்வஸ்திகா இன்ஃப்ரா நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். பல ஆண்டுகளாக, மின்சாரம் கடத்துதல் மற்றும் விநியோக உள்கட்டமைப்புத் துறையில் வலுவான திறன்களை நாங்கள் வளர்த்துள்ளோம். இது கொள்முதல் மற்றும் கட்டுமானம் முதல் சோதனை மற்றும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல் வரையிலான திட்டத்தின் முழுச் சுழற்சியையும் மேற்கொள்ள எங்களுக்கு உதவுகிறது. நிலத்தடி கேபிள் அமைத்தல், துணை மின்நிலையங்கள், மின்மயமாக்கல், தெருவிளக்குகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பணிகள் ஆகியவற்றில் எங்களுக்குள்ள அனுபவம், அத்துடன் எங்களின் நிரூபிக்கப்பட்ட செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் ஆர்டர் விவரங்கள் (ஆர்டர் புக்) ஆகியவை, அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைக்கின்றன. எங்கள் செயல்பாட்டுத் திறன்களைத் தொடர்ந்து வலுப்படுத்தவும், இந்தியாவின் வளர்ந்து வரும் மின் உள்கட்டமைப்புத் துறையில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். நிலையான நீண்டகால வளர்ச்சியை நோக்கிச் செல்லும்போது, இந்த வெளியீட்டின் மூலம் கிடைக்கும் நிதி எங்கள் வணிகத்தை மேலும் வலுப்படுத்த உதவும்," என்று ஸ்வஸ்திகா இன்ஃப்ரா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வினய் குப்தா தெரிவித்தார்.

# வரும் செப்.27 ஞாயிற்றுக்கிழமை அன்று வங்கிகள் இயங்கும்: ஒன்றிய நிதி அமைச்சகம் அறிவிப்பு!

சென்னை 24, செப்டம்பர் 2026: ஞாயிற்றுக் கிழமையன்று வங்கிகள் இயங்கும் என ஒன்றிய நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது. செப்டம்பர் 28 முதல் 30 வரை 3 நாட்கள் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் அறிவித்துள்ளதால் வரும் ஞாயிற்றுக் கிழமை வங்கிகள் வழக்கம் போல் செயல்படும் என நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே வேலைநாட்களாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், செப்டம்பர் 26 நான்காவது சனிக்கிழமை வருவதாலும் செப்டம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் வழக்கம் போல 2 நாட்கள் வங்கிகள் இயங்காது.

அதை தொடர்ந்து வங்கி ஊழியர்களின் போராட்டம் செப்டம்பர் 28 ஆம் தேதி திங்கட்கிழமை தொடங்கி 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இதனால், செப்டம்பர் 26 முதல் தொடர்ந்து 5 நாட்களுக்கு நாடு முழுவதும் வங்கி கிளைகளின் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய சூழல் உருவானது. இதனால் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை செப்டம்பர் 27ஆம் தேதி அனைத்து பொதுத்துறை மற்றும் மண்டல கிராமப்புற வங்கிகளும் வழக்கம் போல் இயங்கும் என்று ஒன்றிய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், அக்டோபர் 2-ஆம் தேதி காந்தி ஜெயந்தி தேசிய விடுமுறை என்பதால், வரும் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே வங்கிகள் செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது.




# ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் 2026-ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் 99.64% கிளைம் தீர்வு விகிதத்துடன் (கிளைம் செட்டில்மெண்ட் ரேஷியோ) முன்னணியில் உள்ளது.

சென்னை 24, செப்டம்பர் 2026: தமிழ்நாட்டில் 2026-ஆம் நிதியாண்டில் நிறுவனம் 99.64% என்ற முன்னணியில் உள்ள கிளைம் தீர்வு விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. இதன் மூலம் குடும்பங்களுக்கு மிகவும் தேவையான நேரத்தில் சரியான நேரத்தில் நிதி நிவாரணம் வழங்கி வருகிறது. மாநிலத்தில் நிறுவனத்தின் டெர்ம் பிளான் (சில்லறை பாதுகாப்பு) வர்த்தகம் 2027-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 43.89% என்ற வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளது. மார்ச் 31, 2026 நிலவரப்படி, நிறுவனம் மாநிலத்தில் 33,92,793 நபர்களுக்கு காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்கியுள்ளது. அத்துடன், தமிழ்நாடு மாநிலத்தில் லிங்க்டு, நான்-லிங்க்டு மற்றும் ஆண்டுத்தொகை (annuity) வணிகம் உள்ளிட்ட தனது சேமிப்புப் பிரிவிலும் நிறுவனம் வலுவான தேவையைப் பெற்று வருகிறது.

மார்ச் 31, 2026 நிலவரப்படி மாநிலத்தில் நிறுவனத்தின் நிர்வகிக்கப்படும் சொத்துக்கள் (ஏயூஎம்) ரூ. 22,294 கோடியாக இருந்தது. முக்கியமாக, மார்ச் 31, 2026 நிலவரப்படி மாநிலத்தில் நிறுவனம் ரூ. 1,90,435 கோடி காப்பீட்டுத் தொகையை அளித்துள்ளது. மேலும் கடந்த 7 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு நிறுவனம் ரூ. 7,356 கோடி மதிப்புள்ள மொத்த பலன்களை வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் பெயரைக் 'ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட்' என மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுக்கு, உரிய ஒப்புதல்களுக்கு உட்பட்டு, இயக்குநர்கள் வாரியம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மார்ச் 31, 2026 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 30 கிளைகள் மற்றும் 17,827 ஆலோசகர்களுடன் 11,446 பங்காளிக் கிளைகள் மற்றும் 6,022 நியமிக்கப்பட்ட நபர்களை நிறுவனம் கொண்டுள்ளது.

ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் விநியோகப் பிரிவுத் தலைவர் (ஷீஃப் ஆஃப் டிஸ்ட்ரிபியூஷன்) திரு. மணிகண்டன் ராஜாமணி அவர்கள் தெரிவிக்கையில், "தமிழ்நாடு எங்கள் நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஒரு வணிகரீதியான முக்கியத்துவம் வாய்ந்த சந்தையாக இருந்து வருகிறது. மேலும், மாநிலத்தின் நகர்ப்புற மற்றும் வளர்ந்து வரும் மையங்கள் இரண்டிலும் நாங்கள் வலுவான வளர்ச்சியைக் கண்டு வருகிறோம். கடந்த சில காலாண்டுகளாக, வாடிக்கையாளர்களின் நடத்தையில் தெளிவான மாற்றத்தைக் காண்கிறோம். தனிநபர்கள் தங்களின் ஒட்டுமொத்த நிதி இலக்குகளின் ஒரு பகுதியாக நிதிப் பாதுகாப்பு, நீண்டகால சேமிப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டமிடல் ஆகியவற்றுக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகின்றனர். விநியோகம், டிஜிட்டல் திறன்கள், பல்வேறு வகையான தயாரிப்புகள் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளில் நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் முதலீடுகள், இப்பகுதியில் எங்கள் இருப்பை மேலும் வலுப்படுத்த உதவுகின்றன."

எங்கள் நிறுவனத்தின் வியூகம் என்னவென்றால், வாடிக்கையாளர்கள் தங்களது எதிர்காலத்தைத் திட்டமிடுவதையும், அதைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைப்பதையும் மிகவும் எளிதாக்குவதாகும். எங்கள் அனைத்து முயற்சிகளும் இந்த இலக்கை நோக்கியே மையப்படுத்தப்பட்டுள்ளன.



ஒட்டுமொத்தமாக, எங்கள் நிறுவனம் செயற்கை நுண்ணறிவு (ஏஐ), மெஷின் லேர்னிங், தரவு பகுப்பாய்வு (டேட்டா அனலிடிக்ஸ்) மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவற்றைப் வாடிக்கையாளர்களின் வாழ்நாள் சுழற்சி முழுவதிலும் பயன்படுத்துகிறது. குறிப்பாக, 2027-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், நிறுவனத்தின் ஒட்டுமொத்த அளவில் தோராயமாக 54% சேமிப்புக் கொள்கைகள் (சேவிங்க்ஸ் பாலிசிகள்) ஒரே நாளில் வழங்கப்பட்டுள்ளன, மேலும் சுமார் 58% காப்பீட்டுக் கொள்கைகள் டிஜிட்டல் கேஒய்சி மூலம் வழங்கப்பட்டுள்ளன. முக்கியமாக, எங்கள் சேவைகளில் 97% சுய-உதவி (செல்ஃப்-ஹெல்ப்) அல்லது டிஜிட்டல் முறைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன; இது எங்கள் வாடிக்கையாளர்கள் சில கிளிக்குகளில் தங்களது பாலிசிகளை எளிதாக நிர்வகிக்க வழிவகுக்கிறது.


# டிசம்பரில் அமெரிக்கா செல்லும் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் ட்ரம்ப்பை சந்திக்கிறார்!!

சென்னை 24, செப்டம்பர் 2026: டிசம்பரில் அமெரிக்கா செல்லும் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் ட்ரம்ப்பை சந்திக்கிறார். ஃப்ளோரிடாவில் டிச.14 மற்றும் 15-ல் ட்ரம்ப் தலைமையில் நடக்கும் ஜி20 தலைவர்கள் உச்சி மாநாட்டில் மோடி பங்கேற்கவுள்ளார்.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள 100% சதவீத வரிகள் மூலமாக இந்தியா அச்சுறுத்தப்பட்டு வரும் சூழலில், பிரதமர் மோடியும் அதிபர் ட்ரம்பும் நேரில் சந்திக்கவிருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வழக்கமாக பிரதமர் மோடியின் பயணம் குறித்த அறிவிப்புகள் தேதிக்கு நெருங்கிய நாள்களில்தான் வெளியிடப்படும் என்பதால் இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் இன்னும் வெளியாகவில்லை என்றாலும், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் செர்ஜியோ கோர் கூறுகையில், ஜி20 மாநாட்டில் ட்ரம்ப் சந்திக்கவிருக்கும் முக்கிய தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர் என்றார்.

மேலும், ஜி20 மாநாட்டின் ஒரு பகுதியாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவை ஒன்றிணைக்கும்



'குவாட்' தலைவர்களுக்கான உச்சி மாநாட்டின் கூட்டங்களும் நடைபெற்று வருவதுடன், புளோரிடா பயணத்தைத் தொடர்ந்து பிரதமர் மோடி கனடாவுக்குப் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னியை சந்திக்கவும் வாய்ப்புள்ளதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# தமிழ்நாட்டின் அரியலூர் மாவட்டத்தில் 1,200 குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்க அல்ட்ரா டெக் நடவடிக்கை

திருச்சி 24, செப்டம்பர் 2026: அல்ட்ராடெக் சிமெண்ட் லிமிடெட், தமிழ்நாட்டின் அரியலூர் மாவட்டத்திலுள்ள வி.கைக்காட்டி கிராமத்தில் உள்ள சுமார் 1,200 குடும்பங்களுக்கு, ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் (ஆர்ஓ) குடிநீர் வசதியை அமைத்ததன் மூலம் 24 மணி நேரமும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள நிறுவனத்தின் ஒருங்கிணைந்த உற்பத்தி பிரிவான ரெட்டிபாளையம் சிமென்ட் ஒர்க்ஸ் மூலம் நிறுவப்பட்டுள்ள இந்த வசதிக்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் சேமிப்புத் தொட்டி மூலம் தண்ணீர் விரீயோகம் செய்யப்படுகிறது.



நாணயம் மூலம் இயங்கும் இந்த ஆர்ஓ வசதியானது, 20 லிட்டர் குடிநீரின் விலையை ரூ.45-லிருந்து ரூ.5 ஆகக் குறைத்துள்ளது. இது குடும்பச் செலவைக் குறைப்பதோடு, வெளி விநியோகஸ்தர்களைச் சார்ந்திருப்பதையும் குறைத்துள்ளது. அதிக கடினத்தன்மை கொண்ட உள்ளூர் நிலத்தடி நீரின் மோசமான தரத்தால் ஏற்பட்ட சவால்களுக்குத் தீர்வு கண்டுள்ள இந்த வசதி, பொதுமக்கள் குடிநீருக்காக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய தேவையும் குறைத்துள்ளது. இந்த வசதி செயல்படத் தொடங்கும் முதல் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை (ஆன்னுவல் மெயின்டெனன்ஸ் கான்ட்ராக்ட்) அல்ட்ராடெக் வழங்கியுள்ளது. அதற்குப் பிறகு, இந்த கிராம பஞ்சாயத்து மற்றும் சமூகமே இதன் பராமரிப்புப் பொறுப்பை ஏற்கும். பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் குறைந்தபட்சக் கட்டணம், இதன் இயக்கம் மற்றும் பராமரிப்பிற்குப் பயன்படுத்தப்படும்.

வி. கைக்காட்டி ஆர்ஓ வசதியானது, இப்பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அல்ட்ராடெக் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்நிறுவனம் ரெட்டிபாளையம், சந்திரபாளையம், வேலிபிரிங்கியம் மற்றும் பெரியா நாகலூர் ஆகிய இடங்களிலும் இதே போன்ற ஆர்ஓ குடிநீர் வசதிகளை நிறுவி, உள்ளூர் மக்களுக்கு நம்பகமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை விரிவுபடுத்தியுள்ளது.

# தனி ஆவர்த்தனம் செய்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் இனியும் பதவியில் நீடிக்க கூடாது: உடனடியாக அவர் நீக்கப்பட வேண்டும்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை

சென்னை 24, செப்டம்பர் 2026: சிறப்புத் தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கான மக்களின் பெயர்களை நீக்கும் முடிவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தோம். ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு அவசர கதியில் நடத்தப்பட்ட இந்தப் பணியில் பல குளறுபடிகள் நடந்தன. மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்கள் போர்க் களம் ஆயின.

இந்நிலையில், இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் வெளியாகியுள்ள செய்தி, எஸ்ஐஆர்-க்குப் பின்பு நடந்த அனைத்துச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்கி உள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் அவர்கள் மற்ற தேர்தல் ஆணையர்கள் இருவரின் ஒப்புதல் இல்லாமல் தன்னந்தனியாக, இரகசியமாகச் செயல்பட்டு வந்துள்ளது அம்பலம் ஆகியுள்ளது. மூன்று தேர்தல் ஆணையர்களில் திரு. சுக்பிர் சிங் சந்து மற்றும் திரு. விவேக் ஜோஷி ஆகிய இருவருக்கும், தேர்தல் கமிஷனில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் மறைத்து வைக்கப்பட்ட செய்தி நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. தங்களுக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுவது குறித்து, 10 மாதங்களில் 14 முறை அவர்கள் ஆட்சேபணை தெரிவித்தும் அவர்கள் புறக்கணிப்பட்டுள்ளது தேர்தல் ஆணையம் மீதான நம்பகத்தன்மையையே முற்றிலுமாகச் சீர்குலைத்துள்ளது.

தேர்தல் ஆணையர்கள் மூவரும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அது சாத்தியமாகாத நிலையில், பெரும்பான்மையின் அடிப்படையில் முடிவுகள் அமைய வேண்டும் என்பதுதான் தேர்தல் ஆணைய விதி. ஆனால், மூவரில் இருவருக்குத் தாங்கள் பொறுப்பு வகிக்கும் அமைப்பில் என்ன நடக்கிறதென்பதே தெரியாமல் இருந்திருக்கிறதென்றால், இதனைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்திய ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதல் இது. சுதந்திரமாகவும் - வெளிப்படைத் தன்மையோடும் - அரசியல் குறுக்கீடுகள் இல்லாமலும் செயல்பட வேண்டிய உச்ச அமைப்பின் மீது மிகப் பெரும் களங்கம் படிந்துள்ளது.

“நீதிமன்றமே தலையிட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கச் சொன்ன பிறகும், அவர்களது பெயர்களைச் சேர்ப்பதற்கு எதிராக மேல்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. யார் இதனைச் செய்தது? அதுகுறித்து கூட எங்களுக்குத் தெரியவில்லை. சட்டப்படி வாக்காளர் பட்டியலில் திருத்தங்களைச் சரிபார்த்து மேற்கொள்ள இபிஓ எனப்படும் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், தகுதியுள்ள வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் அவர்களால் சேர்க்க முடியவில்லை.

ஏற்கெனவே, கடந்த மார்ச் மாதத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் கொடுத்தோம். இனியும் அவர் அந்தப் பதவியில் நீடிக்க கூடாது. ஞானேஷ் குமார் அவர்களை உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய வேண்டும். எஸ்ஐஆர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். இதுவரை தேர்தல் ஆணையத்தில் நடந்த அனைத்தும் நியாயமான முறையில் விசாரிக்கப்பட்டு இதற்குப் பொறுப்பானர்வர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறோம்.

# இந்திய சூழலுக்கு ஏற்ப கேலக்ஸி வாட்ச் சுகாதார அம்சங்களை மேம்படுத்தும் சாம்சங்-ன் நொய்டா ஆர்&டி மையம்

கோயம்புத்தூர் 24, செப்டம்பர் 2026: சாம்சங் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்-நொய்டா (எஸ்ஆர்ஐ-என்), கேலக்ஸி வாட்ச்9 மற்றும் கேலக்ஸி வாட்ச் அல்ட்ரா2 ஆகியவற்றின் சுகாதாரம் மற்றும் நலவாழ்வு சார்ந்த பல்வேறு அம்சங்களின் மேம்பாட்டில் பங்களித்து வருவதுடன், இந்தியாவின் உள்ளூர் சூழல் மற்றும் பயனர் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப வியரபிள் தொழில்நுட்பங்களை சோதித்து மேம்படுத்தி வருகிறது.




எஸ்ஆர்ஐ-என்-ன் பணிகளில் வைட்டல் டிராக்கர், டெய்லி கார்டியோ லோட், ஹியரிங் ஹெல்த் மற்றும் ட்ரெயல் ரன்னிங் போன்ற சுகாதாரம் மற்றும் நலவாழ்வு அம்சங்களுக்கான பங்களிப்புகளும் அடங்கும். இந்தியாவில் மேற்கொள்ளப்படும் பயனர் சோதனைகள் மூலம், நடைமுறை பயன்பாட்டில் ஏற்படும் சவால்கள் கண்டறியப்பட்டு, மென்பொருளின் செயல்திறன் மேம்படுத்தப்படுகிறது.

உதாரணமாக, இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, குண்டும் குழியுமான சாலைகளில் செல்லும் ஆட்டோ ரிக்ஷாவில் ஏற்படும் அசைவுகளை சில நேரங்களில் சைக்கிள் பயணமாக வியரபிள் சாதனம் தவறாகக் கண்டறிந்தது. இதனை ஆய்வு செய்த பொறியாளர்கள், இதுபோன்ற தவறான கண்டறிதல்களை குறைக்கும் வகையில் அல்காரிதம்ஸ்-ஐ மேம்படுத்தினர்.

“எங்களது தளம் வியரபிள் சாதனங்களிலிருந்து பெறப்படும் தரவுகளை ஸ்மார்ட்ஃபோன்-களுடன் இணைத்து, உடற்பயிற்சி, தூக்கம், ஊட்டச்சத்து, மனநலம் மற்றும் முக்கிய உடல்நலக் குறியீடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்கு ஆதரவளிக்கிறது,” என்று சாம்சங் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்-நொய்டா (எஸ்ஆர்ஐ-என்)-வின் வைஸ் பிரெசிடென்ட், சர்வீஸ் டெவலப்மெண்ட் Dr Amitabh Thapliyal தெரிவித்தார்.

வியரபிள் தொழில்நுட்பத்தைத் தாண்டி, சாம்சங் ஹெல்த் தளத்தில் இந்தியாவுக்கான பிரத்யேக சேவைகளையும் எஸ்ஆர்ஐ-என் உருவாக்கி வருகிறது. இதில் Eka Care உடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஏபிடிஎம்-க்கு இணக்கமான சுகாதாரப் பதிவுகள், டாடா 1எம்ஜி உடன் மருந்து கண்காணிப்பு மற்றும் டாடா 1எம்ஜி மற்றும் பார்ம்ஈஸி உடன் இணைந்து வழங்கப்படும் ஃபைண்ட் கேர் சேவைகள் ஆகியவை அடங்கும். இவற்றின் மூலம் மருத்துவ ஆலோசனைகள், மருந்துகள் மற்றும் ஆய்வகப் பரிசோதனைகளைப் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியாவின் டிஜிட்டல் சுகாதார கட்டமைப்புடன் இணைந்து செயல்படுவதன் மூலம், சாம்சங் ஹெல்த் பயனர்கள் தங்களது ஒப்புதலுடன் ஏபிடிஎம்-க்கு இணக்கமான சேவைகள் வாயிலாக சுகாதாரப் பதிவுகளை நிர்வகிக்கவும் பகிரவும் உதவுகிறது.

இந்தியாவின் திறமையான பொறியியல் வளத்தை பயன்படுத்தி, இந்தியாவுக்கான தேவைகளையும் உலகளாவிய தயாரிப்புகளையும் ஒருங்கிணைக்கும் சாம்சங்-ன் அணுகுமுறையை இந்த முயற்சிகள் பிரதிபலிக்கின்றன.

# மக்களிடம் பொய் சொல்லி ஆட்சியை பிடித்தவர் விஜய்: மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் பரந்தாமன் பேச்சு

சென்னை 24, செப்டம்பர் 2026: மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளர் இ.பரந்தாமன் இன்று காலை மதுராந்தகம் ஒன்றியம் கினார் ஊராட்சியில், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட செயலாளர் க.சுந்தர் ஆகியோர் தலைமையில் வாக்காளர்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பிரசாரத்தை தொடங்கினார். முன்னதாக, அப்பகுதி கிராம பெண்கள் 600க்கும் மேற்பட்டோர் திமுக கட்சியின் வண்ண பலூன்களை கையில் பிடித்தபடி வேட்பாளர் பரந்தாமனுக்கு ஆரத்தி எடுத்து மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனை தொடர்ந்து வேட்பாளர் பரந்தாமன் பேசியதாவது: உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு வந்திருக்கிறேன். மதுராந்தகம் தொகுதி மக்களுக்கு பணியாற்ற எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். என்னை சட்ட மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து கோட்டைக்கு அனுப்பினீர்கள் என்றால் தவெக அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 2500 ரூபாய் தருகிறேன் என சொன்னீர்களே என சட்ட மன்றத்தில் முதலமைச்சர் விஜய் முன் நின்று கேள்வி எழுப்புவேன். பட்டதாரிகளுக்கு நான்காயிரம் ரூபாய் தருகிறேன் என்று கூறினீர்களே, ஆட்சிக்கு வந்த பிறகு மதுராந்தகம் தொகுதி இளைஞர்களுக்கு 4 ஆயிரம் எங்கே என கேள்வி எழுப்புவேன். ஏரி வேலை செய்து 4 வாரம் ஆகிறது. ஆனால் கூலி வழங்கவில்லை. எனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்தால் உங்களது பிரச்னைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றுவேன். சட்டமன்றத்தில் கேள்வி எழுப்புவதற்காக என்னை சட்டமன்றத்திற்கு அனுப்புங்கள்.

தேர்தல் முடிந்து 21 நாட்களுக்குள் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு தவெகவில் இணைந்துள்ளார் என்றால் அதற்கு என்ன காரணம், வேறு எந்த காரணமும் கிடையாது. இந்த பெட்டி ஒன்று தான் காரணம். மக்களிடம் பொய் சொல்லி ஆட்சியை பிடித்தவர் விஜய். இவ்வாறு அவர் பேசினார். இதனை தொடர்ந்து வேட்பாளர் பரந்தாமன். கேகேபுதூர், இருசமநல்லூர், முள்ளி, அருங்குணம், சோழன் தாங்கல், தேவாதூர், மாரிபுத்தூர், கீழ்பட்டு, தச்சு, குன்னத்தூர், தருமபுரம், கீரல்வாடி உள்ளிட்ட 31 கிராமங்களுக்கு சென்று வாக்காளர்களை சந்தித்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

காஞ்சிபுரம் செல்வம் ஜி.செல்வம், முன்னாள் எம்எல்ஏ பனையூர் மு.பாபு, மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர் சிவக்குமார், மாவட்ட கவுன்சிலர் ராஜா ராமகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் தேவி அரசு, அவைத்தலைவர் சசி குமார், முத்தையா, ராஜன்பாபு மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

# 'டோரதி' திரைப்படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்வு!




சென்னை 24, செப்டம்பர் 2026: ஜியோ ஸ்டுடியோஸ் வழங்கும், சிக்யா என்டர்டெயின்மென்ட் மற்றும் தம்மம் ஃபிலிம்ஸ் தயாரிப்பில், கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில், நடிகர்கள் ரிஷிகாந்த், சனந்த், கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'டோரதி'. செப்டம்பர் 25 அன்று திரையரங்குகளில் வெளியாகும் இந்தத் திரைப்படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்வு நடைபெற்றது.

நடிகர் முத்துப்பாண்டி, "இது என்னுடைய முதல் மேடை. வாய்ப்பு கொடுத்த கார்த்திக் சாருக்கு நன்றி. எல்லோரும் நன்றாக நடித்திருக்கிறார்கள். ராஜா சார் இசையில் வரும் வரிகளின் மீனாட்சியாய் இந்தப் படத்திற்கு வழித்துணையாய் இருந்த கீர்த்தி சுரேஷ் மேமுக்கு நன்றி".

நடிகர் சௌந்தரராஜன், "கார்த்திக் சுப்புராஜ்ஜை ஷார்ட் பிலிம் காலத்திலிருந்து தெரியும். மிகச்சிறந்த திறமையான இயக்குநர். அவருடைய எண்ணம் செயலெல்லாம் ஒன்று போல இருக்கும். அவர் மதுரையையும் அந்த மனிதர்களையும் மிகவும் நேசிப்பார். இந்திய அளவிலும் அவர் பெரிய இயக்குநராக வளர வேண்டும். 'டோரதி' படத்தில் எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. சனந்த், ரிஷி இருவரின் வளர்ச்சியும் மகிழ்ச்சியாக உள்ளது. கீர்த்தி சுரேஷ் இயக்குநரின் நடிகை. ஆட்டோகிராஃப் அவரிடம் வாங்கி இருக்கிறேன். படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகள்".

கலை இயக்குநர் குமார், "திண்டுக்கல், மதுரை ஆகிய ஊர்களில் லொகேஷன் பார்த்தோம். நிறைய சவாலான விஷயங்கள் இருந்தது. விஷுவலாக நன்றாக இருக்கும். படக்குழுவினர் அனைவரும் கடுமையாக உழைத்துள்ளனர். நிச்சயமாக படம் வெற்றி பெறும்".

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், "எனக்கு சினிமா மீது ஆர்வம் வர காரணம் நான் பிறந்து வளர்ந்த மதுரை மண் தான். சினிமா ரசனைக்கு பெயர் போன ஊர் அது. என்னுடைய படங்களிலேயே 'இறைவி' தான் மிகப் பிடித்தது என பலர் சொல்லி கேட்டிருக்கிறேன். அதற்கு காரணம் அது மனித உணர்வுகளுடன் நெருக்கமாக உள்ளது. என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து வந்த கதையும் கூட. 'இறைவி'யை விட உணர்வுபூர்வமான கதை 'டோரதி'. இந்த படம் தொடங்கியதில் இருந்து ஒரு மேஜிக் போல உள்ளது. படம் பார்த்த எல்லோரும் பாராட்டி வருகின்றனர். கலை இயக்குநர், எடிட்டர் என படத்தின் ஒவ்வொரு தொழில்நுட்ப குழுவினரும் திறமையானவர்கள். எல்லோரும் எல்லா வேலையும் இந்த படத்தில் பார்த்தோம். ராஜா சார் இசை கேட்டு வளர்ந்தவர்கள் நாங்கள். இந்தப் படத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் ராஜா சாரின் இசைதான். டோரதி படத்தின் ஆன்மாவாக இருப்பதற்கு நன்றி சார். சனந்த் திறமையான நடிகர். ரிஷியை ஆடிஷன் செய்துதான் எடுத்தோம். சனந்தும் ரிஷியும் நிஜமாகவே நண்பர்கள் என்பதால் நன்றாகவே திரையில் வொர்க்கவுட் ஆனது. கதை கேட்டதும் கீர்த்தி சுரேஷ் உடனே ஒத்துக்கொண்டார். அவரது திரையிருப்பு படத்திற்கு இன்னும் அதிக வேல்யூ கொடுத்தது. எல்லா நடிகர்களும் சிறப்பாக நடித்துள்ளனர். இது என்னுடைய 10ஆவது படம். உங்கள் அனைவரது ஆதரவுக்கும் நன்றி".

# 'ஆர்எக்ஸ் 100' நடிகர் கார்த்திகேயா கும்மகொண்டாவின் புதிய திரைப்படம் 'கம்பேக்'!



சென்னை 24, செப்டம்பர் 2026: 'ஆர்எக்ஸ் 100' திரைப்படத்தின் மூலம் பிரபலமான நடிகர் கார்த்திகேயா கும்மகொண்டா தனது புதிய திரைப்படம் குறித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார். 'கம்பேக்' எனத் தலைப்பிடப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தின் கிளிம்ப்ஸ் அவரது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

இந்தப் படத்தின் மூலம் அவர் தனது திரைப்பயணத் தில் ஒரு புதிய பாதையயில் பயணிக்கத் தயாராகியுள்ளார். கார்த்திகேயா தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான கார்த்திகேயா கிரியேட்டிவ் வொர்க்ஸ் சார்பில் இப்படத்தை உருவாக்குகிறார். இதில் கதாநாயகனாக நடிப்பதுடன், இயக்குநர் பொறுப்பையும் ஏற்றுள்ளார். அவரது மனைவி லோஹிதா ரெட்டி இப்படத்தின் தயாரிப்பாளராக உள்ளார். குடும்பத்தினர் இணைந்து தயாரிக்கும் இந்தத் திரைப்படம் 2027ஆம் ஆண்டு திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்தப் படத்தில் நடிகர் கார்த்திகேயா பாக்ஸராக நடித்துள்ளார் என்பதை கிளிம்ப்ஸ் காட்டுகிறது. மூன்று ஆண்டுகளாக அந்த குத்துச்சண்டை வீரர் குறித்து எந்தத் தகவலும் இல்லை என்பதை சுட்டிக் காட்டும் குரலோடு கதை தொடங்குகிறது. அந்த இடைவெளிக்குப் பிறகு கதாநாயகன் மீண்டும் களத்திற்கு திரும்பும்போது, பலரும் அவரை கிட்டத்தட்ட மறந்தே விட்டனர். மூன்று ஆண்டுகள் நீண்ட அமைதிக்குப் பிறகு மீண்டும் திரும்புவதால் அவரால் என்ன மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற கேள்விகளும் எழுகின்றன. அந்த இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது என்பதை கிளிம்ப்ஸ் வெளிப்படுத்தவில்லை. ஆனால், களத்தில் ஹீரோவின் கம்பேக் சவால் நிறைந்த பயணமாகவே அமைகிறது. கே.ஆர். குமார் மன்னேவின் தயாரிப்பு வடிவமைப்பு குத்துச் சண்டை உலகத்தை நம்பகமான முறையில் பார்வையாளர்களுக்கு காட்ட இருக்கிறது.

கடின உழைப்பு, தனிப்பட்ட போராட்டம் மற்றும் உணர்வுப்பூர்வமான தருணங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் குத்துச் சண்டை திரைப்படமாக 'கம்பேக்' உருவாகிறது. பயிற்சிக் காட்சிகள் நிஜத்தன்மையுடனும் கடினமானதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீண்டும் களத்திற்கு திரும்புவதற்கான மனரீதியான மற்றும் உடல் ரீதியான போராட்டங்களும் கதையில் முக்கிய இடம் பெறும். குத்துச்சண்டை வீரரை கண்முன்னே கொண்டுவர கார்த்திகேயா கடின உழைப்பை கொடுத்துள்ளார். நடிகராக மட்டுமல்லாது இந்தப் படத்தில் இயக்குநர் பொறுப்பையும் கார்த்திகேயா ஏற்றிருக்கிறார்.

இப்படத்தின் கிரியேட்டிவ் குழுவில் விஜய் புல்கானின் இசையமைப்பாளராகவும், கல்யாண் சூர்யபிரகாஷ் படத்தொகுப்பாளராகவும், ஷில்பா தங்குதுரு ஆடை வடிவமைப்பாளராகவும், சூர்யா அக்கெல்லா கிரியேட்டிவ் இயக்குநராகவும் இடம் பெற்றுள்ளனர்.

ஜெகதீஷ் சீகட்டி ஒளிப்பதிவை மேற்கொள்கிறார் மற்றும் சுதீர் தெலப்ரோலு நிர்வாக தயாரிப்பாளராக பணியாற்றுகிறார்.

கதாநாயகனாக நடிப்பதில் இருந்து கார்த்திகேயாவிற்கு ஏற்பட்டிருந்த இடைவெளியை 'கம்பேக்' முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. அவரது பிறந்தநாளில் இந்தத் திரைப்படத்தின் அறிவிப்பு வெளியிட்டதன் மூலம் தனிப்பட்ட முக்கியத்துவத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்படம், கார்த்திகேயாவின் திரைப்பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது.

# நீலாங்கரை பகுதியில் கட்டுமானம் நடைபெறும் இடத்தில் 12 அலுமினிய மட்ட பலகைகளை திருடிச் சென்ற 3 நபர்கள் கைது. ரூ.3,000/-மதிப்பிலான 12 அலுமினிய மட்ட பலகைகள் மீட்பு.

சென்னை 24, செப்டம்பர் 2026: சென்னை, ஆதம்பாக்கம், டாக்டர். அம்பேத்கர் நகரில் வசித்து வரும் வேலாயுதம், வ/50 என்பவர் கொட்டிவாக்கம், ஜெகநாதன் தெருவில் புதிதாக கட்டிவரும் கட்டிடத்தின் துணை ஒப்பந்ததாரராக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 05.09.2026 அன்று மாலை, கட்டிடத்திற்கு தேவையான பொருட்கள் வாங்க வெளியே சென்றுவிட்டு, மீண்டும் கட்டிடத்திற்கு வந்து பார்த்தபோது, கட்டிட வேலைக்காக வைத்திருந்த 12 அலுமினிய மட்ட பலகைகளை அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் திருடிக் கொண்டு தப்பிச் செல்ல முயன்ற போது, கட்டிட ஊழியர்கள் துரத்திச் சென்றும் அவர்கள் 12 அலுமினிய மட்ட பலகைகளுடன் தப்பி ஓடிச் சென்றதாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபர்களை கண்டுபிடித்து, அலுமினிய மட்ட பலகைகளை மீட்டு தருமாறும் வேலாயுதம் என்பவர் ஜே-8 நீலாங்கரை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஜே-8 நீலாங்கரை காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரிகள் 1.தீபக்ராஜ், வ/25, கேவிபி கார்டன், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை, 2.சச்சின், வ/20, திருவேங்கடம் தெரு, அடையாறு, சென்னை, 3.யாதவன், வ/19, ரிக்ஷிபி கார்டன், ராஜா அண்ணாமலைபுரம் ஆகிய 3 நபர்களை நேற்று முன்தினம் (22.09.2026) கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் ரூ.3,000/- மதிப்புள்ள 12 அலுமினிய மட்ட பலகைகள் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி சச்சின் மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகளும், எதிரி யாதவன் மீது 3 குற்ற வழக்குகளும் நிலுவையில் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (22.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.







# 36 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபோதுவியட்நாம் விமானத்தில் இயந்திர கோளாறு;சென்னையில் அவசரமாக தரையிறக்கம்; 152 பேர் உயிர் தப்பினர்

சென்னை 24, செப்டம்பர் 2026: வியட்நாம் நாட்டிலிருந்து, இலங்கைக்கு சென்று கொண்டு இருந்த, வியட் ஜெட் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், 36,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டது. உடனே சென்னையில் தரை இறக்கப்பட்டதால் 143 பயணிகள் உட்பட, 152 பேர் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர். வியட்நாமில் உள்ள ஹோ சி மின் சிட்டி, சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, இலங்கை தலைநகர் கொழும்புக்கு, நேற்று மாலை வியட் ஜெட் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் புறப்பட்டது. விமானத்தில் 143 பயணிகள், 9 விமான ஊழியர்கள் உட்பட 152 பேர் இருந்தனர். சுமார் 36,000 அடி உயரத்தில் விமானம் சென்னை அருகே வந்து கொண்டிருந்தபோது, திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டது. இதை உடனடியாக விமான கண்டுபிடித்து விட்டார். உடனே அவசரமாக விமானத்தை தரை இறக்க முடிவு செய்தனர். அப்போது சென்னை விமான நிலையம்தான் அருகில் இருப்பதை அறிந்தனர். உடனே டெல்லியில் உள்ள தலைமை கட்டுப்பாட்டு அலுவலகம் மூலம், சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினர். உடனே அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும், போர்க்கால அடிப்படையில் துரிதமாக செய்யப்பட்டது. பின்னர் இரவு 10.40 மணியளவில், விமானம் சென்னையில் பத்திரமாக தரையிறங்கியது. அதற்கு பிறகுதான், சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் மற்றும் வியட் ஜெட் ஏர்லைன்ஸ் விமானிகள் உட்பட அனைவரும் பதற்றம் தணிந்து நிம்மதி அடைந்தனர். பின்னர் பழுதடைந்த விமானங்கள் நிறுத்தி வைப்பதற்கான, ஃபே 44ல் விமானத்தை நிறுத்தினர். பயணிகள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு விமான நிலைய ஓய்வு அறைகளில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுக்கு சென்னை விமான நிலைய அதிகாரிகள் குடிநீர், சிற்றுண்டி போன்ற ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர். தொடர்ந்து விமான பொறியாளர்கள் குழுவினர் பழுதடைந்த இயந்திரங்களை சரி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டனர். சரியான நேரத்தில் கோளாறை விமானிகள் கண்டு பிடித்து நட வடிக்கை எடுத்ததால் நல்வாய்ப்பாக 143 பயணிகள் உள்ளிட்ட 152 பேர் உயிர் தப்பினர்.